**செய்தி வெளியீடு எண் : 216** **நாள் : 02.02.2024**

**சென்னை, சேப்பாக்கத்தில் புதியதாக கட்டப்பட்ட பொதுப்பணித்துறை சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் அலுவலகக் கட்டடம், மகளிருக்கான உணவுக் கூடம், மின்னணுத்திரை (LED Wall). தரமணி நுழைவாயில் மற்றும் தரக்கட்டுப்பாட்டு கோட்டங்களுக்கென கொள்முதல் செய்யப்பட்ட உபகரணங்கள் ஆகியவற்றை இன்று (2.2.2024) மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு தலைமையில், மாண்புமிகு இளைஞர் நலம்–விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்கள்.**

பொதுப்பணித்துறையில் முதன்மைத் தலைமைப் பொறியாளர் அலுவலகமும், சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் அலுவலகமும் ஒரே கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு போதிய இடவசதி இல்லாததால், தனியாக கட்டடம் கட்ட வேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டது. "தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை மண்டலத்திற்கான புதிய அலுவலக கட்டடம்" ரூ.23.05 கோடி செலவில் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளது. இக்கட்டடம் மூன்று தளங்களுடன் 1,04,049 சதுர அடியில் கட்டப்பட்டுள்ளது.

முதல் தளத்தில் தலைமைப் பொறியாளர் அறை மற்றும் அலுவலகங்கள், கோட்டப் பொறியாளர் (மின் I&II) அலுவலகங்களும், இரண்டாம் தளத்தில் தலைமை கட்டடக் கலைஞர் அறை மற்றும் அலுவலகங்கள், நூலகம் மற்றும் கலந்தாய்வுக் கூடமும், மூன்றாம் தளத்தில் கண்காணிப்புப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அறை மற்றும் அலுவலகங்கள், கூட்ட அரங்கு மற்றும் பிற கட்டட கட்டுமான உபகோட்டம் அலுவலகங்கள் செயல்படவுள்ளது.

மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தலைமையில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் இன்று திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது.

மேலும், பொதுப்பணித்துறை வளாகத்தில் மகளிருக்கான உணவுக் கூடம். ரூ.70.00 லட்சம் செலவில் கட்டப்பட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இன்று திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது.

இவ்வளாகத்தில் புதியதாக 10.5 அடி x 6.5 அடி அளவிலான மின்னணுத்திரை (LED Wall) அமைக்கப்பட்டுள்ளது. இந்த மின்னணுத்திரை மூலம் பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப்படும் அலுவலக கட்டடங்கள், அரசு மருத்துவமனைகள், அரசுப் பள்ளிகள், விளையாட்டுத்திடல்கள், நினைவகங்கள் போன்ற அரசு கட்டட பணிகள் முதலியவயற்றை இத்துறையின் மூலம் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்படும், இந்த மின்னணுத்திரையானது, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இன்று திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

சென்னை, தரமணி, பொதுப்பணித்துறை வளாகத்தில் நுழைவாயில் அமைக்கும் பணி ரூ.35 லட்சம் செலவில் முடிவடைந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இன்று திறந்து வைக்கப்பட்டது.

தரக்கட்டுப்பாட்டு கோட்டங்களுக்கு 20 வகையாக ஆய்வக உபகரணங்கள், 20 வகையான கள ஆய்வு உபகரணங்கள் ஆக 40 வகையான சிவில் உபகரணங்கள் மற்றும் 8 வகையான மின் உபகரணங்கள் ரூ.6.80 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்த உபகரணங்கள் மூலம் கட்டுமானப் பொருட்களின் 45 வகையான பண்புகளை கண்டறிந்து தரத்தினை உறுதி செய்ய முடியும். மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து தரக்கட்டுப்பாட்டு கோட்டங்களின் பயன்பாட்டிற்காக ஆய்வக உபகரணங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று தரக்கட்டுபாட்டு பொறியாளர்களிடம் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர். பி.சந்தரமோகன் இ.ஆ.ப., பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு.கே.பி.சத்தியமூர்த்தி, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் திரு.கே.ஆயிரத்தரசு இராஜசேகரன் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in